<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணி – உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) நிலையில் தகுதி வாய்ந்த அலுவலர்களை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதிகளில், பொது விதி 39 (a) (i)ன் கீழ் தற்காலிகமாக செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி)ஆக பதவி உயர்வு அளிக்க தற்காலிகப் பெயர்ப் பட்டியல் வெளியிடுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண்.161 நாள் 31–3–2010

படிக்கப்பட்டவை

1. அரசாணை (ப) எண்.455, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 20.7.2009.
2. அரசாணை (ப) எண்.533, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ( இ3) துறை, நாள் 14.9.2009.
3. அரசாணை (ப) எண்.551, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 22.9.2009.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதம் எண்.50576/08/இஇ1, நாள் 11.3.2010.

–––––

<u>**ஆணைகள்**</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2009–10ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சி பணியில் செயற்பொறியாளர்(ஊவ) பதவிக்கு, காலிப்பணியிட மதிப்பீடு 34 என நிர்ணயிக்கப்பட்டதின் அடிப்படையில் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 34 உதவி செயற்பொறியாளர்களுக்குப் பணி விதிகளைத் தளர்வு செய்து, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) பணியிடத்திற்கான தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது. அந்தத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்ற அனைவருக்கும் மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பதவி உயர்வு அளிக்கப்பட்டுவிட்டது.

2. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், வேலூர் மாவட்டத்தில் செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி)ஆகப் பணிபுரிந்த திருமதி.எம்.கவிதா என்பவரை தற்காலிகப் பணி நீக்கம் செய்து அரசாணை (ப) எண்.621, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 29.10.2009ல் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், தருமபுரி மாவட்டத்தில் பணிபுரிந்த மற்றொரு செயற்பொறியாளர் (ஊவ) திருமதி.ஜி.அனுராதா அவர்களையும் தற்காலிகப் பணி நீக்கம் செய்து அரசாணை (ப) எண்.692, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 29.12.2009 ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது என்றும், தற்பொழுது மேற்குறிப்பிட்ட செயற்பொறியாளர் நிலையில் 2 பணியிடங்களும் முறையே 4 மாதங்கள் மற்றும் 2 மாதங்களாகக் காலியாக வைக்கப்பட்டுள்ளது என்றும், வேலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பாரத பிரதமர் சாலை மேம்பாட்டுத் திட்டம், இன்ன பிற ஊரக வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், மேற்காணும் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும்

செயற்பொறியாளரின் (ஊவ) பங்கு மிக முக்கியமானதாகும் என்றும், எனவே மேற்குறிப்பிட்ட ஊரக வளர்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தவும் கண்காணிக்கவும் பொதுநல அடிப்படையில் மேற்குறிப்பிட்ட 2 செயற்பொறியாளர் (ஊவ) நிலையிலான காலிப் பணியிடங்களை தற்காலிகமாக நிரப்புவது அவசியமாகிறது என்றும், எனவே, முதுநிலையில் உள்ள உதவி செயற்பொறியாளர் (ஊவ)களை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில் பொதுவிதி 39 (a) (i)ன் கீழ் தற்காலிகமாக மேற்குறிப்பிட்ட காலிப் பணியிடங்களில் நிரப்ப ஏதுவாக 2009–10ஆம் ஆண்டிற்கான கூடுதல் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிட வேண்டி அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

**3.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு விரிவாக ஆய்வு செய்தது. செயற்பொறியாளர்(ஊவ) பணியிடத்திற்கான தற்காலிகப் பணி விதிகளின்படி முழு தகுதியாக, பணிமூப்பு, துறைத் தேர்வு இவற்றிற்கிடையில் உதவி செயற்பொறியாளராக (ஊவ) 5 ஆண்டுகள் பணித்தகுதிகள் தேவை என்று வரையறுக்கப்பட்டுள்ளது. நிர்வாக நலன் கருதி தற்காலிகப் பணி விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட 5 ஆண்டுகள் பணித்தகுதியை நிறைவு செய்யாத, தற்போது முதுநிலையில் உள்ள திருமதி.ஆர்.மலர்விழி (முதுநிலை எண்.69), உதவி செயற்பொறியாளர் (ஊவ) மற்றும் திரு.எஸ்.தணிகாச்சலம் (முதுநிலை எண்.70), உதவி செயற்பொறியாளர் (ஊவ) அவர்கள் பொருட்டு தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் தற்காலிகப் பணிவிதிகளில், விதி 4 (2)ஐ தளர்த்தி ஆணையிடலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூலின் முதல் தொகுதியில் பகுதி 2ல் உள்ள தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 48ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி திருமதி.ஆர்.மலர்விழி (முதுநிலை எண்.69), உதவி செயற்பொறியாளர் (ஊவ) மற்றும் திரு.எஸ்.தணிகாச்சலம் (முதுநிலை எண்.70), உதவி செயற்பொறியாளர் (ஊவ) அவர்கள் பொருட்டு செயற்பொறியாளர்(ஊவ) பதவி உயர்வுக்கு, உதவி செயற்பொறியாளராக ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற பணித்தகுதி தொடர்பான தமிழ்நாடு பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் தற்காலிகப் பணி விதிகளில் செயற்பொறியாளர்களுக்கான விதி 4(2)ஐ தளர்த்தி தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

**4.** மேலும், தமிழ்நாடு ஆளுநரால் பணித்தகுதிகளிலிருந்து விலக்கு அளித்து ஆணையிடப்பட்டுள்ள கீழ்க்காணும் இரண்டு உதவி செயற்பொறியாளர் (ஊவ) நிலை அலுவலர்களை, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில், பொது விதி 39 (a) (i)ன் கீழ் அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு முற்றிலும் தற்காலிகமாக செயற்பொறியாளர் (ஊவ) ஆகப் பதவி உயர்வு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| வ.எண் | பெயர் |
|---|---|
| 1 | திருமதி.மலர்விழி |
| 2 | திரு.எஸ்.தணிகாச்சலம் |

**5.** மேலே பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள இரண்டு உதவி செயற்பொறியாளர் (ஊவ) நிலை அலுவலர்களை, செயற்பொறியாளர் (ஊவ) பணியிடத்தில் காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்குட்பட்டு, தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் செயற்பொறியாளராக(ஊவ) பதவி உயர்வு அளித்து அரசு ஆணையிடுகிறது. செயற்பொறியாளர் (ஊவ)ஆகப் பதவி உயர்வு அளிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் (ஊவ) பணியிடத்தில் காலிப் பணியிடங்கள் இல்லாத நிலையில் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி உதவி செயற்பொறியாளர் (ஊவ)ஆக பதவியிறக்கம் செய்யப்படுவார்கள் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

**6.** மேலே பத்தி 3ல் கண்ட, தற்காலிக செயற்பொறியாளர் (ஊவ) பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் பணியினை வரும் 2010–11ஆம் ஆண்டு செயற்பொறியாளர் (ஊவ) பணியிடங்களுக்கான முறையான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடும்போது,

மேற்குறிப்பிட்ட செயற்பொறியாளர் பணியிடங்களை, காலிப் பணியிடங்களாகக் கருதி தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிட்ட பின்னர் தகுதியின் அடிப்படையில் வரன்முறை செய்யப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
சம்மந்தப்பட்ட அலுவலர்கள்
வழி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர், சென்னை–15
சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–6 / 18 (கணக்கு / தணிக்கை)

நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்